# 14

*சபை:*

# இதன் மூப்பர்கள், இவர்கள் எப்படி ஏற்படுத்தப்பட மற்றும் விலக்கப்பட இருக்கின்றனர்?

## *மூப்பர்கள் எவ்வாறு ஏற்படுத்தப்படுகின்றனர்?*

1. ***சபை"யில்" மற்றும் சபையின் "மீது" மூப்பர்களை உண்மையாக யார் ஏற்படுத்துகின்றார் (அப். 20:28)?***
2. ***மூப்பர்களின் தகுதிகளை வெளிப்படுத்தியவர் யார் (யோவா. 16:13)?***
   - *அ. மூப்பர்களை ஏற்படுத்துதல் அல்லது அவர்களின் தகுதிகளை விளக்கப்படுத்துதல் ஆகியவற்றை உண்மையிலேயே பரிசுத்த ஆவியானவரே செய்கின்றாரா?*
   - *ஆ. மூப்பர்களிடம் கேட்டுக்கொள்ளப்படும் இந்தத் தகுதிகள் யாவை? (பாடம் 13ல் அட்டவணையைக் காணவும்.)*
   - *இ. என்றால், இந்தத் தகுதிகள் எவ்வாறு அடையப்படுகின்றன (2 தீமோ. 2:15; 1 தீமோ. 3:1)?*

## தேர்வு செய்தல்

1. ***முதல் உதவிக்காரர்களைத் தேர்வு செய்ததில், தகுதிகளைக் குறிப்பிட்டவர் யார் (அப். 6:2, 3)?***
   *அவர்களைத் தேர்ந்தெடுத்தது யார் (அப். 6:5, 6)?*
   - *அ. அந்த வேண்டுகோளுக்கு ''சபையார்'' எவ்விதத்தில் பதில்செயல் செய்தார்கள் (அப். 6:5)?*
   - *ஆ. மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதில், இந்தச் செயல்முறை ஞானமுள்ளதாக இருக்காதா?*
   - *இ. மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் சபையார் யாவரும் பங்கேற்கக் கூடாதா?*
     *இப்படிப்பட்ட மனிதர்களைக் கண்டறிந்துள்ள நிலையில், அவர்களை சபையார் தேர்ந்தெடுக்கக் கூடாதா?*
   - *ஈ. கண்காணிக்கப்படுகின்றவர்கள் தங்களைக் கண்காணிப்பவர்களைத் தேர்ந்தெடுப்பதில் குரல் கொடுக்கக் கூடாதா?*
2. ***மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் செய்யக் கூடாதது என்ன?***

அ. பணியை நாடுகின்றவர்கள் சபையாரிடத்தில் பிரச்சாரம் செய்யக் கூடாதா (ரோமர் 12:10அ)?
கனம் பண்ணுவதில், ஒருவர் மற்றவரிடம் எவ்வித உணர்வை வெளிப்படுத்த வேண்டும் (ரோமர் 12:10ஆ)?

ஆ. சபையின் ஊழியர், மூப்பர்களின் நியமனத்தில் கட்டுப்பாடு செலுத்த வேண்டுமா (1 தீமோ. 4:12)?

இ. இன்னொரு (மூப்பர்) ''விலகுதல்'' அல்லது ''இருத்தல்'' என்பதைத் தீர்மானிக்கும் வகையில் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமா?
பிரசங்கியார் "விலகுதல்" அல்லது "இருத்தல்" என்பதைத் தீர்மானிக்கும் வகையில் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமா?

## நியமிக்கப்படுதல்

**1. உதவிக்காரர்களை சபையார் தேர்ந்தெடுத்த பிறகு, அப்போஸ்தலர்கள் என்ன செய்தனர் (அப். 6:6)?**

இப்பொழுது சபையார் மனிதர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு, என்ன செய்யப்பட வேண்டும்?

அ. தேர்ந்தெடுத்தலும் மற்றும் நியமித்தலும் இருந்ததா?

ஆ. மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் இந்தச் செயல்முறைமை பின்பற்றப்படக் கூடாதா?

**2. சபைகள் நிலைநாட்டப்பட்ட பொழுது பவுலும் சீலாவும் என்ன செய்தனர் (அப். 14:23)?**

**3. தீத்துவை கிரேத்தாவில் (பவுல்) விட்டு வந்தது ஏன் (தீத்து 1:5)?**

அ. இந்த வசனக் குறிப்புகள், எல்லா மூப்பர்களுமே நியமிக்கப்பட்டனர் என்று போதிப்பதில்லையா?

ஆ. எவ்விதமான ஆசரிப்புடன் மூப்பர்கள் தேர்வு செய்யப்பட்டு, நியமிக்கப்பட வேண்டும் (கொலோ. 3:17)?
பவுலின் வேண்டுகோளை (பிலி. 4:9) மனப்பாடம் செய்யவும். தொடக்க கால சபைகளில் மூப்பர்களை நியமித்த முறை பற்றி விவாதம் செய்ய முடியும், ஆனால் அதன் ஆசரிப்புத் தன்மையானது அப்பொழுதும் இப்பொழுதும் கேள்வி கேட்கப்பட முடியாததாகவே உள்ளது.

இ. மூப்பர்களை நியமிப்பதில் பிரசங்கியார் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் (1 தீமோ. 5:22)? மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து, செய்வதில் பிரசங்கியார் எந்த வகையில் உதவலாம்? அவருடைய ஊழியத்தின் பண்பு என்னவாக இருக்க வேண்டும் (தீத்து 2:7, 8)?

**4. உதவிக்காரர்களையும் மூப்பர்களையும் நியமித்தவர் யார் (அப். 6:6; 14:23; தீத்து 1:5)?**

அ. தேர்ந்தெடுத்தல் மற்றும் நியமனம் இல்லாது எவரொருவராவது இப்பணிப் பொறுப்பைக் கற்பிதம் செய்து கொள்ள முடியுமா?

ஆ. இந்தத் தகுதிகள் உடைய எல்லாரும், தேர்ந்தெடுத்தலோ அல்லது நியமனமோ இல்லாமல் மூப்பர்களாகச் செயல்பட வேண்டுமா?

அப்படியென்றால், தேர்ந்தெடுத்தலும் நியமனமும் எதற்காக?

இ. என்றால், ஒருவர் எப்பொழுது மூப்பராக ஊழியம் செய்ய வேண்டும் (தீத்து 1:5)?

## மூப்பர்கள் எவ்வாறு விலக்கப்படுகின்றனர்?

**1. மூப்பர் ஒருவர், மூப்பரின் ஊழியத்தைச் செய்யத் தவறினால், அவர் மூப்பர் என்று கருதப்பட முடியுமா?**

**2. மூப்பர் ஒருவர் எப்பொழுது நீக்கப்பட வேண்டும்?**

அவரிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நம்பிக்கைக்கு அவர் உண்மை யற்றவராகும் பொழுது.

**3. ஒரு மூப்பர் சபையில் ஊழியம் செய்வதற்கான தம் தகுதியை எப்பொழுது இழக்கின்றார்?**

அவரது செயல்பாடற்ற தன்மையினால் அல்லது கேள்விக்குரிய நடக்கையினால். பிறகு அவர் நீக்கப்பட வேண்டும்.

அ. ‘‘ஒரு தரம் மூப்பரானவர் எப்பொழுதும் மூப்பராகவே இருக்கின்றாரா?”

ஆ. “ஒரு தரம் கிறிஸ்தவரானவர் எப்பொழுதும் கிறிஸ்தவராகவே இருக்கின்றாரா?”

இ. என்றால், பின்வரும் கூற்று எவ்வாறுள்ளது?: “ஒரு கோவேறுக் கழுதை தனது கழுதைக்குரிய இயல்பை மாற்ற முடியாதது எப்படியோ அப்படியே ஒருவர் தம் மூப்பர் என்ற நிலையை விட்டு விலகி விட முடியாது.”

**4. தகுதியற்ற மூப்பரை நீங்குவதில் பங்கேற்க வேண்டியவர் யார்?**

அவரைத் தேர்ந்தெடுத்து நியமித்தவர்களே - அப்போதுள்ள (மற்ற) மூப்பர்களின் வழிநடத்துதலினால்.

**5. மூப்பர்களின் நிலை என்ன (1 தீமோ. 3:1)?**

அ. ஒருவர் தம் பணிக்கடமையை விட்டு விலக முடியாதா?

ஆ. அப்படிப்பட்டவர் எப்பொழுது விலக வேண்டும்?